
# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
(Peer Reviewed Journal Multidisciplinary)
ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

*Vol:8 Issue :31 July 2026*
கோட்டை:8 வாயில்:31 ஜூலை 2026

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

*International e Journal of Tamil Research*

# EDITORIAL BOARD

Founder / Editor in Chief

**Dr PRIYAKRISHNAN**

Publisher

**MR P. JAYAKRISHNAN**

Editorial Board Members

**Dr V SELVAKUMAR**

Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India

**Dr. Ravindran A/L Maraya**

Head of Department & Senior Lecturer, Department of Indian Studies (DIS), Universiti Malaya, Kuala Lumpur, Malaysia.

**Dr Silllalee A/L S.Kandasamy**

Senior Lecturer, Department of Indian Studies, Universiti Malaya,

**Dr. S. KAVITHA**

School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

**Dr.K.DAYANIDHI**

Assistant Professor & Head i/c , Department of Vaishnavism , University of Madras, TamilNadu, India.

Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

**Dr O.MUTHIAH**

Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University)
Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

**DR UMADEVI**

Professor In Tamil, Department of Modern Indian Languages And
Literery Studies University of Delhi,Delhi.

**DR JAGADEESAN.T.**

Assistant Professor of Tamil, Department of Indian Languages,
Faculty of Arts, Banaras Hindu University,
Varanasi- 221005, Uttar Pradesh,India.

**DR SENTHIL PRAKASH.S**

Teacher – in- charge/Assistant professor (SG),Department of
Tamil, Institute of Languages, Literature& culture,
Visva – Bharathi University,Santiniketan,West
Bengal, India -731235

**DR R TAMILSELVAN**

Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

**Dr SWARNAVEL ESWARAN**

Associate Professor Departments of English, and Media and Information
Michigan State University. USA.

**Dr (Ms.) NILANKA LIYANAGE**

Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts,
Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,
Eastern University Srilanka

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

# Aran

*International e Journal of Tamil Research*


## EDITORIAL BOARD


**Mrs THULSIVANTHANA UDAYASHANKAR**

Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of Aesthetic Stidies ,Eastern University, Srilanka

**Dr B. DHANANJAYAN**

Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet, Chennai - 600 021.

**Dr P.SEKAR**

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.

நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்

இதழாக்கம்

**திரு ப. ஜெயகிருஷ்ணன்**

முதன்மை ஆசிரியர்

**முனைவர் பிரியாகிருஷ்ணன்**



***+917299587879***

www.aranejournal.com

aranjournal@gmail.com


**அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.**

# தமிழ்



# தொல்காப்பியம் வழி ஐங்குறுநூற்றின் முல்லைத்திணை

## *The Mullai Landscape of Ainkurunuru in the Light of Tolkappiyam*

**கு.செந்தமிழ்செல்வி,** உதவிப்பேராசிரியர்,தமிழ்த்துறை,பான் செக்கர்ஸ் மகளிர் கல்லூரி (தன்னாட்சி),தஞ்சாவூர்- 613 006

***Abstract***

*Language serves as a medium for human communication. It transcends mere letters and words; through the meanings they convey, it effectively articulates all information essential to worldly life. In this context, Tolkappiyam the earliest extant Tamil text not only elucidates the grammatical structure of the language (covering letters and words) but also stands as a comprehensive repository of life, articulating the framework of human existence itself. Sangam literary works are structured based on the Porulathikaram (the section on subject matter) of Tholkappiyam. Beyond their classification into Aham (inner/subjective) and Puram (outer/objective) categories, these texts vividly portray concepts related to human existence and the lifestyles of the people of the Sangam era. This article examines and presents evidence demonstrating that the Mullai-thinai poems within the Sangam anthology Ainkurunuru are grounded in the principles of Tholkappiyam's Porulathikaram.*

***Keywords:*** *Young woman, Pidavam (wild jasmine), peacock, forehead, rainy season.*

**ஆய்வுச்சுருக்கம்**

மனிதனின் கருத்துப் பரிமாற்றக் கருவியாக அமைவது மொழி. மொழி என்பது எழுத்தும் சொல்லுமாக நில்லாது அதன் வழி பிறக்கும் பொருளின் மூலம் உலகியலுக்கு தேவையான அனைத்து செய்திகளையும் சிறப்புற எடுத்துரைக்கிறது. அவ்வகையில் தமிழ்மொழியின் முதல் நூலான தொல்காப்பியம் எழுத்து, சொல் என்று மொழியின் இலக்கண கட்டமைப்பை விளக்குவதோடு பொருள் என்னும் மனித வாழ்க்கைக்கான கட்டமைப்பையும் எழுத்துரைக்கும் வாழ்வியற் பெட்டகமாக விளங்குகிறது. இவ்வாறே தொல்காப்பியப் பொருளதிகாரத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்ததே சங்க இலக்கிய நூல்கள். இவை அகநூல்கள், புறநூல்கள் என்னும் பகுப்போடு மனிதனின் வாழ்வியல் சார்ந்த கருத்துக்களையும், சங்க கால மக்களின் வாழ்க்கை முறையையும் நம் கண்முன்னே காட்சிப்படுத்துகிறது. அதனடிப்படையில் தொல்காப்பியப் பொருளதிகாரத்தை முதன்மையாகக் கொண்டு சங்க இலக்கிய நூலான

ஐங்குறுநூற்றின் முல்லைத் திணைப் பாடல்கள் அமைந்துள்ளன என்பதற்கான சான்றுகள் இக்கட்டுரையில் ஆராய்ந்து அளிக்கப்பட்டுள்ளன.

**திறவுச்சொற்கள்:** அரிவை, பிடவம், மஞ்ஞை, நுதல், கார்.

**முன்னுரை**

உலகின் பழமையான மொழிகளுள் ஒன்று தமிழ்மொழி. தமிழ்மொழியில் எழுந்த மிகத் தொன்மையான இலக்கணநூல் தொல்காப்பியம். அடுத்ததாக எட்டுத்தொகைப், பத்துப்பாட்டு என்று சொல்லப்படும் சங்கஇலக்கியங்கள். தொல்காப்பியப் பொருளதிகாரம் மனிதர்களின் வாழ்க்கைக்கான கட்டமைப்பை எடுத்துரைக்கும் நூலாக விளங்குகிறது. அதனடிப்படையில் அமைந்த சங்க இலக்கிய நூல்கள் பழங்கால தமிழர்களின் அகவாழ்வையும், புறவாழ்வையும் எடுத்துத்துரைக்கும் வாழ்வியல் களஞ்சியமாக அமைந்துள்ளது. தொல்காப்பியம் கூறும் முல்லைத் திணைக் கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு ஐங்குறுநூற்றில் முல்லைத் திணை அமைப்பியலை ஆராய்வதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

**திணைப் பாகுபாடு**

பண்டைத் தமிழர் காதலையும், வீரத்தையும் தம் இரு கண்களாகப் போற்றினர். இந்த அகம் புறம் பற்றிய செய்திகளை தொல்காப்பியப் பொருளதிகாரம் விளக்குகின்றது. தொல்காப்பியத்தின் முதல் இயலான அகத்திணையியல் அகத்திணைப் பாகுபாட்டையும், இரண்டாவது இயலான புறத்திணையியல் புறத்திணைப் பாகுபாட்டையும் விரிவாக விளக்குகிறது.

**அகத்திணைப் பாகுபாடு**

கைக்கிளை, குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை, பெருந்திணை என்ற ஏழும் அகத்திணையாகும். இதனை,

**கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்**
**முற்படக் கிளந்த எழுதிணை என்ப** (தொல்.பொருள்.அகத்.01)

என்னும் தொல்காப்பிய நூற்பா எடுத்துரைக்கிறது. இவற்றில் குறிஞ்சி முதல் பாலை வரை உள்ள ஐந்தும் நடுவண் ஐந்திணை என்றும், அகவாழ்விற்கு அன்பே அடிப்படைக் காரணம் என்பதால் இவ்வைந்திணையும் அன்பின் ஐந்திணை என்றும் வழங்கப்படுகிறது.

**புறத்திணைப் பாகுபாடு**

தொல்காப்பியத்தில் அகத்திணையியலுக்கு அடுத்து உள்ள புறத்திணையியலில் அகத்திணைக்குப் புறனாக அமையும் புறத்திணைகள் பற்றி விளக்கப்பட்டுள்ளது. இதனை,

**அகத்திணை மருங்கின் அரில்தப உணர்ந்தோர்**
**புறத்திணை இலக்கணம் திறம்படக் கிளப்பின் (தொல்.பொருள்.59:1-2)**

**வெட்சி தானே குறிஞ்சியது புறனே (தொல்.பொருள்.59:3)**
**வஞ்சி தானே முல்லையது புறனே (தொல்.பொருள்.64:01)**
**உழிஞை தானே மருதத்துப் புறனே (தொல்.பொருள்.66:01)**
**தும்பை தானே நெய்தலது புறனே (தொல்.பொருள்.70:01)**
**வாகை தானே பெருந்திணைப் புறனே (தொல்.பொருள்.73.01)**

என்னும் தொல்காப்பிய நூற்பாக்களின் வழி அறியலாம்.

**முல்லைத்திணை**

முல்லைத்திணை ஆயரினத்தவரின் வாழ்க்கைப் பற்றி விளக்குகிறது. எழிலும் வளமும் கொண்ட இயற்கையோடு இயைந்த இன்பமான வாழ்க்கை வாழ்ந்தனர். முல்லை என்பது,

**“இடுகுறியோ, காரணக்குறியோ, எனின் ஏகதேச காரணம் பற்றி முதலாசிரியர் இட்டதோர் குறி என்று சொல்லப்படும். என்ன காரணம் எனின் காடுரை உலகிற்கு “முல்லைப்பூ சிறந்தது”**

என்பதாகும். பனி முல்லை பேயனே என்பதற்கு ஏற்ப முல்லைக்கரிய நூறு பாடல்களை பேயனாரே பாடினார் என்பது சிறப்பு.

**முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள்**

**முதல்கரு உரிப்பொருள் என்ற மூன்றே**
**நுவலுங் காலை முறைசிறந் தனவே**
**பாடலுட் பயின்றவை நாடுங் காலை (தொல்.பொருள்.03)**

என்னும் இந்நூற்பாவில் முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் பற்றி தொல்காப்பியர் குறிப்பிடுகிறார்.

**முதற்பொருள்**

முதற்பொருள், கருப்பொருள் தோன்றுவதற்கு அடிப்படையாக நிற்றலின் முதற்பொருள் எனப்பட்டது. நிலம், பொழுது என முதற்பொருள் இருவகைப்படும் என்பதை தொல்காப்பியர்,

**முதல்எனப் படுவது நிலம்பொழு திரண்டின்**
**இயல்பென மொழிப இயல்புணர்ந் தோரே (தொல்.பொருள்.04)**

என்ற அடிகளின் வழி எடுத்துரைக்கிறார்.

**முல்லை நிலத்துக்குரிய நிலம்**

நிற்பதற்கு இடம் அளிப்பதால் நிலம் எனக் காரணக் குறியால் குறித்தனர். முல்லைக்குரிய நிலம் காடும் காடு சார்ந்த இடமும். நில பாகுபாட்டையும், அந்நிலங்குரிய தெய்வங்களையும் பற்றி,

**மாயோன் மேய காடுறை உலகமும்**
**சேயோன் மேய மைவரை உலகமும்**
**வேந்தன் மேய தீம்புனல் உலகமும்**
**வருணன் மேய பெருமணல் உலகமும்**
**முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச்**
**சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே (தொல்.பொருள்.05)**

என்னும் தொல்காப்பிய நூற்பா வழி அறியமுடிகிறது. இதில் மாயவன் உறையக்கூடிய காடு பொருந்திய உலகம் என்று முல்லை நிலம் பற்றி எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

முல்லை நிலத்திற்குரிய காடும் காடு சார்ந்த இடம் பற்றி ஐங்குறுநூற்றின் 404, 411, 414, 424, 425, 430, 432, 433, 461, 462, 484, 499 ஆகிய பன்னிரண்டு பாடல்களில் விவரிக்கப்பட்டுள்ளது.

**முல்லை நிலத்துக்குரிய பொழுதுகள்**

காலம் பொரும்பொழுது, சிறுபொழுது என இருவகைப்படும். இவ்விருபொழுதுகளும் ஆறு கூறுகளாகப் பகுக்கப்பட்டுள்ளது. அறுவகை பெரும்பொழுதுகளும், சிறுபொழுதுகளும் ஐவகை நிலங்களும் உரிமை உடையனவாக அமைந்தாலும், முல்லை நிலத்திற்கு கார்காலமும், மாலையும் சிறப்புடையதாக அமையும் என்பதை தொல்காப்பியர்,

**காரும் மாலையும் முல்லை (தொல்.பொருள்.06)**

என்ற நூற்பா வழி குறிப்பிடுகிறார்.

இதில் பெரும்பொழுதாக கார்காலமும் சிறுபொழுதாக மாலை நேரமும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஐங்குறுநூற்றில் கார்காலம் பற்றி,

**நின்நுதல் நாறும் நறும்தண் புறவில்**
**நின்னே போல மஞ்ஞை ஆலக்**
**கார்தொடங் கின்றால் பொழுதே**
**போர்இயல் அரிவை நாம்நயத் தகவே (ஐங்.413)**

என்ற பாடலும், இவ்வாறு 417, 418, 423, 427, 434, 437, 440, 441, 448, 451, 452, 454, 455, 456, 461, 462, 468, 469, 472, 484,497, 499 ஆகிய இருபத்திரண்டு பாடல்களும் கார்காலம் பற்றிக் கூறுகிறது. 489 வது பாடல் மாலைப்பொழுது பற்றி விளக்குகிறது.

**கருப்பொருள்**

முதற்பொருளை அடிப்படையாகக் கொண்டு அவ்வந்நிலங்களில் பிறக்கும் பொருள்கள் கருப்பொருள்களாகும். இக்கருப்பொருள் பற்றி தொல்காப்பியர்,

**தெய்வம் உணாவே மாமரம் புட்பறை**
**செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ**
**அவ்வகை பிறவும் கருவென மொழிப(தொல்.பொருள்.20)**

என்னும் நூற்பாவின் வழி எடுத்துரைப்பதைக் காணமுடிகிறது. இதில் தெய்வம், உணவு, விலங்கு, மரம், பறவை, பறை,தொழில், யாழ் என்பனவற்றோடு பிறவும் கருப்பொருள்களாகும் எனக் குறிப்பிடுகிறார்.

**முல்லைத் திணைக்குரிய கருப்பொருள்**

| | | |
|---|---|---|
| **தெய்வம்** | - | திருமால் |
| **மக்கள்** | - | ஆயர், இடையர், ஆய்ச்சியர், இடைச்சியர். (இவர்கள் குறித்த செய்தியை 467 ஆவது பாடலில் காணலாம்) |
| **விலங்கு-** | | மான், முயல் (மான் பற்றி — 401, 434 பாடல்களும், முயல் பற்றி- 421 பாடலும் விளக்குகின்றன) |
| **ஊர்** | - | பாடி, சேரி |
| **நீர்** | - | காட்டாற்று நீர் |
| **பூ** | - | முல்லை, பிடவம், தோன்றிப்பூ (412, 420, 422, 434, 437, 448, 454, 456,489) |
| **மரம்** | - | காயா, கொன்றை, குருந்து (கொன்றை — 432, 435, 436, 458, 462,497) |
| **உணவு** | - | அரிசி, வரகு, சாமை |
| **பறை** | - | ஏறுகோட்பறை |
| **பண்** | - | முல்லைப்பண் சாதாரிப்பண் (சாதாரிப்பண் — 408) |
| **யாழ்** | - | முல்லையாழ் (யாழ் - 402, 410, 412, 473) |
| **தொழில்** | - | வரகு, திணை விதைத்தல், ஆநிரை மேய்த்தல், ஏறுதழுவல். (வரகு பற்றி — 494வது பாடல், ஏறுதழுவுதல் பற்றி — 417 வது பாடல்) |

**முல்லைக்குரிய உரிப்பொருள்**

ஐந்திணைக்குரிய உரிப்பொருள் பற்றிய செய்திகளை பின்வரும் தொல்காப்பிய நூற்பா வழி அறியலாம்.

**புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல்**
**ஊடல் இவற்றின் நிமித்தம் என்றிவை**
**தேருங் காலைத் திணைக்குரிப் பொருளே (தொல்.பொருள்.16)**

இருத்தலும் இருத்தல் நிமித்தமும் முல்லைத்திணைக்குரிய உரிப்பொருளாகும். இருத்தல் இருத்தல் நிமித்தம் என்பது கடமை காரணமாக பிரிந்து சென்ற தலைவன் வரும் வரை தலைவி ஆற்றியிருத்தல் என்பதாகும். மேலும் இருத்தல் என்பதற்குத் தலைவனும் தலைவியும் தம்மனைக்கண் கூடி அன்பாற்றழுவி இன்புற்றமர்ந்திருத்தலும், தலைவன் பாசறை முதலிய இடத்தே ஆற்றியிருத்தலும் ஆகிய இருத்தல் பலவும் கொள்ளுதல் வேண்டும்.

**முடிவுரை**

பழங்கால தமிழருடைய அகம், புறம் என்னும் வாழ்வியல் நெறிகள் எவ்வாறு அமையவேண்டும் என தொல்காப்பியம் எடுத்துரைக்க, அந்த அமைப்பு முறையைக் கொண்டு சங்க இலக்கியங்கள் அமைந்துள்ளன. அன்பின் ஐந்திணைக்கும் பின்புலமாக அமைந்த பொருள்கள் முதல், கரு, உரி என்ற மூன்றாகும். இம்மூன்று பொருள்களும் ஐங்குறுநூற்றில் சிறப்பாகக் காட்டப்பட்டுள்ளது. இக்கருத்துக்களை மேற்கண்ட செய்திகளின்மூலம் முழுமையாக அறியமுடிகிறது.

**துணைநூற்பட்டியல்**

தொல்காப்பியம் பொருளதிகாரம் — இளம்பூரணர் உரை சாரதா பதிப்பகம், பதினான்காம் பதிப்பு — 2016.

*Tolkāppiyam Poruḷatikāram — Commentary by Iḷampūraṇar, Saradha Publications, 14th Edition — 2016.*

ஐங்குறுநூறு — அர.சிங்காரவடிவேலன் (உ.ஆ), வர்த்தமானன் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு — 2022.

*Ainkurunuru — Ara. Singaravadivelan (Commentary/Editor), Varthamanan Pathippagam, Chennai, First Edition — 2022.*

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.
வரும் 2026, அக்டோபர் மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள் - அக்டோபர் 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் அக்டோபர் இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com